செ.வெ.எண்:20 நாள்:15.12.2019

**தூத்துக்குடி நீதிமன்ற வளாகத்தில் ரூ.4.89 கோடி மதிப்பீட்டில் புதிய மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற அலுவலக கட்டிடத்தினை மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் திரு.வி.பாரதிதாசன், திரு.எஸ்.எஸ்.சுந்தர் ஆகியோர் திறந்து வைத்தனர். மேலும், தூத்துக்குடி குடும்ப நல நீதிமன்றம் மற்றும் போக்சோ நீதிமன்றங்களை துவக்கி வைத்தனர். மேலும் சாத்தான்குளத்தில் ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற புதிய கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டினார்கள்.**

---

தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி கூட்டரங்கில், நீதிமன்ற கட்டிடங்கள் திறப்பு விழா மற்றும் சாத்தான்குளம் ஒருங்கிணைந்த நீதிமன்ற புதிய கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டு விழா மற்றும் தூத்துக்குடி குடும்ப நல நீதிமன்றம் மற்றும் போக்சோ நீதிமன்றங்களை துவக்க விழா இன்று (15.12.2019) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் திரு.வி.பாரதிதாசன், திரு.எஸ்.எஸ்.சுந்தர் ஆகியோர் கலந்து கொண்டு, ரூ.4.89 கோடி மதிப்பீட்டில் புதிய மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்து, சாத்தான்குளத்தில் ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற புதிய கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டினார்கள். மேலும், தூத்துக்குடி குடும்ப நல நீதிமன்றம் மற்றும் போக்சோ நீதிமன்றங்களை துவக்கி வைத்தார்கள். இவ்விழாவில் மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர் திரு.ஏ.டி. ஜெகதீஸ் சந்திரா, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் பால கோபாலன்,இ.கா.ப., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர் திரு.வி.பாரதிதாசன் அவர்கள் பேசியதாவது:-

தூத்துக்குடி மாவட்டத்தில் நீதித்துறை, வருவாய் நிர்வாகத்துறை, காவல்துறை மூன்று முக்கிய துறைகளிலும் துடிப்பு மிக்க வேகமாக பணியாற்றும் இளம் அலுவலர்கள் உள்ளனர். இவர்களால் தூத்துக்குடி மாவட்டம் தமிழகத்தின் முதன்மை மாவட்டமாக திகழும். தூத்துக்குடி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் ரூ.4.89 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும்,குடும்ப நல நீதிமன்றம் மற்றும் போக்சோ நீதிமன்றம் ஆகிய இரண்டு நீதிமன்றங்கள் புதியதாக துவக்கப்பட்டுள்ளளது. மேலும், பழமையான நீதிமன்றம் உள்ள திருவைகுண்டத்தில் ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஏழை, எளிய, சாதரண மக்கள் விரைவாகவும், எளிமையாகவும் நீதிமன்றத்தை அணுக வேண்டும் என்பதற்காக உரிமையியல் நீதிமன்றங்கள், குற்றவியியல் நீதிமன்றங்கள் இரண்டும் இணைந்த நீதிமன்றங்கள் திறக்கப்பட்டு வருகிறது. குடும்ப நல நீதிமன்றங்களில் வழக்குகள் அதிகம் வருவது நல்ல ஆரோக்கியமனதாக இல்லை இருப்பினும் வழக்குகளை விரைந்து முடிக்க தனியாக நீதிமன்றங்கள் திறக்கப்படுகிறது. இளம் சிறார்களுக்கு வன்முறை பெருகியுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூக நீதி விரைந்து கிடைக்க வேண்டும் என்பதற்காக போக்சோ நீதிமன்றம் தனியாக திறக்கப்படுகிறது. நாங்கள் நீதிமன்றத்தை திறந்து வைத்துள்ளோம். இங்கு வழக்குகள் வராமல் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். குடும்ப நல வழக்குகளும், போக்சோ வழக்குகளும் அதிகம் வருவது ஏற்றுக் கொள்ள தக்கதாக இல்லை.

நீதிமன்றங்களில் அதிக வழக்குகள்தேங்கியுள்ளது என்பது உண்மை. ஆனால் இதற்கு நீதிமன்றம் மட்டும் காரணம் இல்லை பல்வேறு காரணங்கள் உள்ளது. காவல்துறையின் மூலம் 1 இலட்சம் வழக்குகளுக்கு எப்.ஐ.ஆர் போடப்பட்டு இறுதி தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படாமல் உள்ளது. மேலும், வழக்குகளை சம்பந்தப்பட்ட நீதிபதிகளுக்கு ஒதுக்குவதிலும், காலதாமதம் ஏற்படுகிறது. நீதிமன்றத்தால் பல்வேறு வழக்குளை விசாரிக்க காலதாமதம் ஏற்படுகிறது என்பதால் நீதியை வேறு வகையில் வழங்க முடியாது. நீதியை வழங்கிட நீதிமன்றத்தால் மட்டுமே முடியும் சட்டத்தின் வழியாக சாட்சிகளை ஆராய்ந்து தண்டனைகளை வழங்க நீதிமன்றங்கள் தான் உள்ளது. காவல் நிலையங்கள் நீதிமன்றங்களாகவும், காவலர்கள் நீதிபதிகளாகவும் மாறக் கூடாது. உச்ச

நீதிமன்றம் சட்டத்தின் ஆட்சி மட்டுமே இருக்க வேண்டும் என்று மீண்டும், மீண்டும் தெரிவித்துள்ளது. நீதியை வழங்குவதில் நீதித்துறையில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் பங்கு உண்டு. நீதிபதி என்பதும் இதில் ஒரு பதவியாகும். மூத்த வழக்கறிஞர்கள் இளம் வழக்கறிஞர்களுக்கு வழிகாட்டியாக திகழ வேண்டும். இளம் வழக்கறிஞர்களும் மூத்த வழக்கறிஞர்களிடம் ஜூனியராக சிறப்பாக பணியாற்றிட வேண்டும். ஒவ்வொரு பொது மக்களிடமிருந்தும் வழக்குகளை பெறும் போது அவை தீர்த்து வைப்பது வழக்கறிஞர்களுக்கு பெரும் பொறுப்பாக உள்ளது. வழக்குகளில் சமரச தீர்வு சாதகமாக உள்ள வழக்குளை விரைந்து தீர்த்து வைக்க வேண்டும். ஒரு சில வழக்குளை நீதிமன்றங்களுக்கு செல்லாமலேயே வெளியிலேயே தீர்த்து வைக்க முடியும் என்றால் வக்கீல்கள் தீர்த்து வைக்க வேண்டும். சாத்தான்குளம் புதிய நீதிமன்ற கட்டிடம் இன்று திறந்து வைப்பதாக இருந்தது. பல்வேறு காரணங்களால் இன்று திறந்து வைக்கப்படவில்லை இருப்பினும் இக்கட்டிடத்தில் நாளை முதல் நீதிமன்ற பணிகள் துவங்கிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என உயர் நீதிமன்ற நீதியரசர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர் திரு.எஸ்.எஸ்.சுந்தர் அவர்கள் பேசியதாவது:-

தூத்துக்குடி மாவட்டம் வ.உ.சி, மகாகவி பாரதியார் போன்ற சாதனையாளர் வாழ்ந்த மாவட்டம் என்பதில் பெருமையடைகிறேன். இந்த மாவட்டத்தில் பணியாற்றுகின்ற நீதிபதிகள், வழக்கறிஞர்கள் தங்களது பணியில் கடமை உணர்வுடன் செயலாற்ற வேண்டும். ஒரு வழக்கில் நீதிபதிகள் வழங்குகின்ற தீர்ப்பை காட்டிலும், அந்த வழக்கு சம்பந்தமாக வாதாடுகின்ற வழக்கறிஞர்களுக்கு அந்த தீர்ப்பின் வெற்றி பெருமை சேர்த்து தரும். எனவே, வழக்கறிஞர்கள் சட்ட புத்தங்களை படித்து, தங்களது பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். பொது மக்கள் அளிக்கும் பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் சரியான தீர்வு காண வேண்டும். வ.உ.சிதம்பரம் அவர்கள் பல்வேறு வழக்குகளில் தூத்துக்குடி நீதிமன்றம் மட்டுமல்லாது சென்னை நீதிமன்றத்திலும் வாதாடி தீர்ப்புகளை பெற்றுள்ளார். மூத்த வழக்கறிஞர்கள், இளம் வழக்கறிஞர்களை ஊக்குவித்து அடுத்த தலைமுறை வழக்கறிஞர்களை சிறப்பான முறையில் உருவாக்கிட வேண்டும். பொதுப்பணித்துறையினர் நீதிமன்ற கட்டிடங்களை கட்டும் போது மத்திய அரசு தற்போது உருவாக்கியுள்ள விதிமுறைகளை பின்பற்றி சிறப்பாக கட்ட வேண்டும். மேலும், புதிதாக தொடங்கப்பட்ட நீதிமன்றத்தினையும் சேர்த்து தமிழகத்தில் 179 நீதிபதிகள் பணியிடமும், 148 பணியாளர்கள் பணியிடமும் காலியாக உள்ளது. விரைவில் காலியாக உள்ள பணியிடங்கள் தகுதி தேர்வு மூலம் நிரப்பப்படும். தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூரில் சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது இதை போன்று திருவைகுண்டத்திலும் சார்பு நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உயர் நீதிமன்ற நீதியரசர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில், மாவட்ட முதன்மை நீதிபதி திரு.என்.லேகேஸ்வரன், மாவட்ட தலைமை நீதிபதி திருமதி.எஸ்.ஹேமா, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் திரு.ஜெயபாலன், பார் அசோசியேசன் உறுப்பினர்கள் திரு.திலக், திரு.சொக்கலிங்கம், ஆறுமுகபெருமாள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.ஜெயராம், உதவி செயற்பொறியாளர் திரு.அருள் நிதிசெல்வன், உதவி பொறியாளர்கள் திரு.பாலசுப்பிரமணியம், திரு.அருண்குமார் மற்றும் தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், சாத்தான்குளம் வக்கீல் சங்க பிரதிநிதிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்